01.03.2024
அசல் வழக்கு எண்: 65/2020

வா.சா.1 சாட்சி குணசேகரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அப்பாவை பெற்ற அப்பா பெயர் என்ன என்றால் குருசாமிகோணார் ஆகும். எனது தாத்தாவின் அப்பா பெயர் என்ன என்றால் மாயக்கோணார் ஆகும். எனது அம்மாவை பெற்ற அப்பா பெயர் என்ன என்றால் ராமசாமி ஆகும். ராமசாமியின் அப்பா பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மாவை பெற்ற அப்பாவின் பெயர் வெறும் ராமசாமியா என்றால் அவ்வாறுதான் எனது தாயார் சொன்னார். எனது தாயார் யாருடன் இருக்கிறார் என்றால் என்னுடன் இருக்கிறார்.

1ம் பிரதிவாதி மாயகுரு இந்த வழக்கில் என்ன கட்சி செய்து வருகிறார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். என்ன கட்சி செய்கிறார் என்றால் நானும், எனது தம்பி முத்துப்பாண்டியும் 1ம் பிரதிவாதிக்கு பிறக்கவில்லை என்று கட்சி செய்கிறார். எனது தாயாரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் முடியாது. எனது தாயார் இந்த நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். எனது தகப்பனாரின் தூண்டுதலின் பெயரில் தாக்கல் செய்துள்ளார். எனது தாயார் தாக்கல் செய்த மனுவில் நானும், 2ம் வாதியும் தனக்கும் சூரப்பகவுண்டர் என்பவருக்கும் பிறந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதியின் பூர்வீகம் எது என்றால் நெடுமதுரை ஆகும். எனது தாயாரின் பூர்வீகம் எது என்றால் சிறுவாலை ஆகும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனக்கு எனது தாயாரிடமிருந்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. 1ம்

பிரதிவாதி மாயகுருவுடன் பிறந்தவர்கள் பெயர் தெரியுமா என்றால் எனது பெரியப்பா சுந்தர்ராஜ் மற்றும் எனது அத்தை ராஜாத்தி ஆகும். எனது பிறந்த நாள் 15.11.1975 என்றால் சரிதான். நான் 30.05.1973ம் தேதி பிறந்ததாக கூறினால் அது தவறு என்றால் சரிதான். 2ம் வாதியின் பிறந்த நாள் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எத்தனை வருடம் இளையவர் என்று சொல்லமுடியுமா என்றால் 3 வருடம் இளையவராவார்.

மாயகோணாரின் உடன் பிறந்த சகோதரர்கள் பெயர்கள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் மாயகோணாரின் சொத்துக்கள் என்றால் சரிதான். மாயகோணாரின் உடன் பிறந்தவர்களுடன் ஏற்பட்ட பாகப்பிரிவினை சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மாயகுரு, ராஜாத்தி மற்றும் சுந்தர்ராஜ் ஆகியோர்கள் இடையே ஏற்பட்ட பாகபிரிவினை சம்பந்தமாக தெரியுமா என்றால் தெரியும்.

தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் 9 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரே சொத்தாக உள்ளதா அல்லது தனித்தனியாக இலக்கமாக உள்ளதா என்றால் ஒரே சொத்தாக உள்ளது. தாவா சொத்துக்கள் 2 இலக்க சொத்துக்கள் என்று சொல்லி இருந்தால் அது தவறு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்குமால் சொல்ல முடியுமா என்றால் நான்குமால் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தாவின் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

தாவா வழக்கு நிலுவையில் இருந்தபோது சண்டை எதுவும் ஏற்பட்டதா என்றால் எனக்கும் எனது தகப்பனாருக்கும் தண்ணீர் குழாய் சம்பந்தமாக சண்டை ஏற்பட்டது. மேற்படி சண்டை சம்பந்தமாக செய்தித்தாளில் செய்து வந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

செய்தித்தாளில் செய்தி வந்ததற்கு 1ம் பிரதிவாதி தினகரன் செய்திதாளில் 21.09.2023ம் தேதி பொது அறிவிப்பு கொடுத்தார் என்றால் சரிதான். நான் அதற்கு பதில் அறிவிப்பு கொடுத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் செய்தித்தாளில் உள்ள அறிவிப்புதான் அந்த அறிவிப்பு என்றால் சரிதான். (**21.09.2023ம் தேதியிட்ட செய்தித்தாள் பி.வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)